# சென்னை மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு, ‘ஸ்டெம்’ கல்வித் திட்டம் !

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி தொடங்கி வைத்தார்



சென்னை, செப். 3 -

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக, நவீன கல்வி முறைகளை அறிமுகப்படுத்தும் நோக்கில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் முன்னெடுப்பில், தென்ன சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் எடுரைட் அறக்கட்டளை இணைந்து, STEM (Science, Technology, Engineering, Mathematics) கல்வித் திட்டத்தினை வழங்க உள்ளனர். அதன் துவக்க விழா, நேற்று (01.09.2025), அடையாறு, சென்னை மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது.

முதல் கட்டமாக தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் 4 பள்ளியில் கோட்டூர், திருவான்மியூர், மடுவின்கரை, அடையாறு, மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த STEM கல்வித் திட்டம் வழங்கப்பட உள்ளது.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர். தமிழச்சி தங்கபாண்டியன் திட்டத்தினை தொடங்கி வைத்து, மாணவர்களிடம் STEM கல்வியின் முக்கியத்துவம் மற்றும் தேவை குறித்து உரையாற்றினார், வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா நிகழ்விற்கு தலைமை தாங்கினார், சென்னை மாநகராட்சி தெற்கு மண்டல துணை ஆணையர் அப்தாப் ரசூல் , எட்யுரைட் அறக்கட்டளை இயக்குனர் திருமதி.சுதா சண்முகம், 13வது மண்டலக்குழுத் தலைவர் துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வில், வேளச்சேரி கிழக்கு பகுதி செயலாளர் செ.துரைகபிலன், 173வது மாமன்ற உறுப்பினர் திருமதி. சுபாஷினி துரை, சென்னை மாநகராட்சி கல்வி அலுவலர்கள் .தணிகைவேல், திருமதி. ஜெ.வசந்தி, திருமதி.சுமதி, தலைமை ஆசிரியர்கள் திருமதி.ஜெரிஸ் பிரிதிமா, திருமதி.பிரான்சிகா சாந்தி, திருமதி.உஷாராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இன்றைய உலகில், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் கல்வியின் முக்கிய அங்கமாக உள்ளது. மாணவர்களை எதிர்கால வேலை வாய்ப்புகளுக்கு தயார்ப்படுத்தவும், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு உணர்வை ஊக்குவிக்கவும் STEM கல்வி அவசியம்.

இந்தியாவில் கல்வி துறையில் தமிழக அரசாங்கம் முன்னெடுத்து வரும் பல்வேறு திட்டங்களோடு இணைந்து, தென்சென்னை நாடாளுமன்ற அலுவலகம் மற்றும் எடுரைட் அறக்கட்டளை, இந்த STEM கல்வி முயற்சியை தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதியில் துவக்குகிறது.

இதன் மூலம் மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் ஆழ்ந்த புரிதல் உருவாக்கப்படும். மாணவர்களின் சிந்தனை, புதுமை, ஆராய்ச்சி திறன் மேம்படுத்தப்படும். எதிர்காலத்தில் உலகத் தரத்திலான போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்கும் வாய்ப்புகள் அதிகரிக்கும்.

---

### ஒலி - ஒளி ஆ.பாபு தலைமை ! ஜே.ஜே.எபினேசர் - ஐட்ரீம் ஆர்.மூர்த்தி முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி புதிய நிர்வாகிகள் அறிமுக ஆலோசனைக் கூட்டம் !

## வி.பி.கலைராஜன் - ஆர்.டி.சேகர் - கலாநிதி வீராசாமி சிறப்புரை !

சென்னை, செப்- 03

சென்னை வடக்கு மாவட்ட இலக்கிய அணி புதியதாக பொறுப்பேற்றிருக்கும் மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் நாளை (04.09.2025 வியாழக்கிழமை) மாலை 5.00 மணியளவில் தண்டையார்பேட்டை காலரா மருத்துவமனை எதிரில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் ஒலி ஒளி ஆ.பாபு தலைமை வகிக்கிறார்.

மாவட்ட இலக்கிய அணி நிர்வாகிகள் : ப.ஆ.சண்முகம், கோ.ராதாகிருஷ்ணன், பி.ரவிசங்கர், ஏ.கே.பால்சாமி, கா.சிவகுமார், கோ.ரத்தினவேல், எம்.லோகநாதன், கா.ஜெயராஜ், ஓ.இ.அழகானந்தம், எம்.மோகன்பாபு, என். வேதா, எஸ்.எம்.கஜேந்திரன், பி.கல்யாணசுந்தரம், ஆகியோர் வரவேற்கின்றனர்.

இதில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் ஐட்ரீம் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.லட்சுமணன், எஸ். ஜெபதாஸ்பாண்டியன், இரா.செந்தில்குமார், வ.பெ.சுரேஷ், க.ஜெயராமன், அ.முருகன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் கழக இலக்கிய அணி செயலாளர் வி.பி. கலைராஜன், சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி இலக்கிய அணி அமைப்பாளர் மு.ஜெகன் நன்றி கூறுகிறார்.

---

### நாளை (4 – 9 – 2025) வியாழன் –பொதுமக்களின் கோரிக்கை ஏற்று

# அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் - கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத் துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, செப்.3-

பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினத்தன்று பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அனைத்து சார்பதிவாளர் அலுவலகங்களிலும் கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்து பதிவுத் துறைத் தலைவர் அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:-

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான 04.09.2025 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, ஆவணி மாதத்தில் வரும் சுபமுகூர்த்த தினங்களான 04.09.2025 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும் இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லை களோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு கூடுதலாக தட்கல் முன்பதிவு வில்லைகளும் வில்லைகளுடன் 4 பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அவ்வறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சடகோபன்

**செப்டம்பர் 3 (1979)**



சென்னையில் கழகத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் ஒருவர்.

1961ஆம் ஆண்டு சென்னை நகரக் குடிசை வாழ்வோர் மாநாடு நடத்தி அந்த சங்கத்தின் பொதுச் செயலாளராக இருந்தவர்.

கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராகவும், 1959 முதல் 1968 வரை சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும், 1965–66இல் துணை மேயராகவும், 1967இல் மாநகராட்சி மத்திய குழு தலைவர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு – இந்தி எதிர்ப்பு ஆகிய போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

பேரறிஞர் அண்ணாவால் பாராட்டப்பட்டவர்.

தலைவர் கலைஞரின் அன்புக்கு பாத்திரமானவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# வேலைவாய்ப்பு வழங்குவதில் 15.24 % பங்களிப்புடன் தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம்!

# திராவிட மாடல் அரசின் சாதனைகளில் மற்றுமொரு சிகரம்!



மாண்புமிகு தமிழ்நாட்டில் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு 4 ஆண்டுகளில் எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு அரசு நிறைவேற்றியுள்ளது. அவற்றினால் எட்டப்பட்ட பலன்கள் என்னவென்பதை ஒன்றிய அரசின் புள்ளி விவரங்களே அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றன.

தமிழ்நாட்டை இந்தியாவிலேயே நம்பர் 1 மாநிலமாக உயர்த்த வேண்டும் எனும் இலட்சிய உறுதியோடு செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு ஒவ்வொருத்துறையிலும் அந்த உயரத்தை எட்டி சாதனைப் படைத்து வருகிறது.

14 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 11.19 விழுக்காடு எனும் இரட்டை இலக்க வளர்ச்சியை எட்ட வைத்து இந்தியாவிலேயே முதன்மை பொருளாதாரமாக உயர்த்தியது திராவிட மாடல் அரசு.

அதன் தொடர்ச்சியில் இப்போது தொழிற்துறை வேலைவாய்ப்புகளை வழங்குவதில் இந்தியாவிலேயே முதலிடத்தைப் பிடித்து மகத்தான சாதனையை நிகழ்த்தியிருக்கிறது தமிழ்நாடு;ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் வெளியிட்டுள்ள 2023-24 நிதியாண்டுக்கான வருடாந்திர தொழில் கணக்கெடுப்பு (ASI) முடிவுகளில் 15.24 விழுக்காடு பங்களிப்புடன் நாட்டிலேயே வேலைவாய்ப்பு வழங்குவதில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனைப் படைத்திருக்கிறது தமிழ்நாடு.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழகப் பேச்சாளர்**

தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக 14வது இடத்தில் இருந்த தமிழ்நாடு 2வது இடத்துக்கு திராவிட மாடல் ஆட்சியில் முன்னேறி உள்ளது.

ஏற்றுமதி தயார் நிலைக் குறியீட்டில், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) அளவில், தமிழ்நாடு இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

ஒட்டுமொத்த இந்தியாவின் வளர்ச்சி 7.24% இருக்கும்போது, தமிழ்நாட்டின் வளர்ச்சியானது 8.19% உயர்ந்துள்ளது.

இந்திய அளவில் பணவீக்கமானது 6.65% இருக்கும் போது, தமிழ்நாட்டில் அது 5.97% குறைந்து உள்ளது.

ஒன்றிய அரசின் ஆய்வறிக்கையில் குஜராத் மாநிலம் இரண்டாவது இடத்தையும், மகாராஷ்டிரா மூன்றாவது இடத்தையும், உத்தரப்பிரதேசம் நான்காவது இடத்தையும் பிடித்துள்ளன.

நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கையில் 15.43 விழுக்காடு அளவு தமிழ்நாட்டில்தான் உள்ளன; தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தமிழ்நாடே இந்தியாவில் முதலிடத்தைப் பிடித்துச் சாதனைப் படைத்திருக்கிறது.

தமிழ்நாடு முதலமைச்சரின் வழிக்காட்டலில் தமிழ்நாட்டில் சிறப்பாகக் கையாளப்படும் சட்டம் ஒழுங்கு, தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர் களுக்கு வழங்கப்படும் சலுகைகள், விரைவான, எளிதான ஒப்புதல்கள் , அரசின் பல்வேறு திட்டங்களின் வழி சிறப்பாக வளர்த்தெடுக்கப்படும் திறன்மிக்க மனித வளம் ஆகியவையே இந்தச் சாதனைக்கு அடித்தளமாகியிருக்கின்றன.

ஒன்றிய அரசு அரசியல்ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் எத்தனையோ தடைகளைத் தமிழ்நாடு அரசிற்கு ஏற்படுத்தினாலும் அத்தனை தடைகளையும் தாண்டி தமிழ்நாட்டையும் தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் தனது கடும் உழைப்பால் நாட்டிலேயே முதலிடத்திற்கு உயர்த்தி மகத்தான சாதனைப் படைத்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

அந்தவகையில் 202425 நிதியாண்டில் தமிழ்நாட்டின் மாநில மொத்த உற்பத்தி வளர்ச்சி, 9.69% என அதிகரித்துள்ளது. தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட 8% வளர்ச்சி, மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் ஆய்வறிக்கையில் உத்தேசிக்கப்பட்ட 9.3% வளர்ச்சி ஆகியவற்றை விடவும் அதிகமான வளர்ச்சியை தமிழ்நாடு எட்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாடு எட்டியிராத அதிகபட்ச வளர்ச்சி என்பது மட்டுமல்ல, இந்தியாவிலேயே மிக அதிக வளர்ச்சியை இந்த ஆண்டு பதிவு செய்திருப்பது தமிழ்நாடுதான். குறிப்பாக சேவைகள் துறை 12.7%, இரண்டாம் நிலை துறைகள் 9% வளர்ச்சி கண்டுள்ளன. ஒன்றியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகத்தின் குஜராத், பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள், தங்கள் மாநிலங்களின் 2024-25ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி வீதத் தரவுகளையே இன்னும் பதிவு செய்யவில்லை.

இந்த வளர்ச்சியை தமிழ்நாடு எந்த சூழலுக்கு மத்தியில் எட்டியுள்ளது என்பதும் நாம் சிந்திக்க வேண்டிய ஒன்று. வரிப்பகிர்வில் ஒன்றிய அரசு இழைத்த அநீதியால் 4% வருவாயை இழந்திருக்கிறது தமிழ்நாடு. ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் பங்கெடுக்கும் திட்டங்களில் ஒன்றிய அரசின் பங்கை தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருகிறது பாஜக அரசு. உதவி மானியங்களில் தமிழ்நாடு 2.09% வீழ்ச்சியை கண்டிருக்கிறது. ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகை 3 ஆண்டுகளுக்கு முன்பே நிறுத்தப்பட்டு விட்டது. புயல் நிவாரண நிதியாக தமிழ்நாடு அரசு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைத்துள்ள 37,000 கோடி ரூபாயில் இதுவரை ஒரு ரூபாய் கூட விடுவிக்கப்படவில்லை.

இந்த ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டின் பெயர் கூட அதில் இடம்பெறவில்லை. மற்ற பெரிய திட்டங்கள் எதையும் தமிழ்நாடு மோடி ஆட்சியிடம் இருந்து பெறவில்லை. மதுரை எய்ம்ஸ் மட்டும் ஒற்றைச் செங்கல்லை நட்டு வைத்ததுடன் நிற்கிறது. மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்திற்கான நிதியில் 4,000 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவைத்தொகை உள்ளது. கல்வி திட்டத்திற்கான நிதியில் 2,152 கோடி ரூபாய் நிலுவைத்தொகை உள்ளது.

இதைத்தாண்டி தமிழ்நாடு அல்லது மற்ற எதிர்க்கட்சி மாநிலங்கள் பெரும் முயற்சி எடுத்து ஈர்க்கும் முதலீடுகளையும் குஜராத், உத்தரப் பிரதேசத்திற்கு திசைதிருப்பும் சூழ்ச்சிகளும் கடந்த சில ஆண்டுகளில் நடந்திருக்கின்றன. ஒன்றிய அரசின் இத்தனை வஞ்சனைகளையும் கடந்து தமிழ்நாடு இந்த பெரும் வளர்ச்சியை கண்டிருக்கிறது என்பதுதான் குறிப்பிடத்தக்க சாதனை.

அதேபோல, தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கு சீரழிந்து விட்டது என்ற அவதூறு பரப்புரையும் இதன்மூலம் முறியடிக்கப்பட்டுள்ளது. எங்கே அமைதி நிலவுகிறதோ, எங்கே உட்கட்டமைப்பு வசதிகள் பலமாக இருக்கிறோ, எங்கே அரசின் ஒத்துழைப்பு சிறப்பாக இருக்கிறதோ, அங்கேதான் முதலீடு செய்ய எந்த நிறுவனங்களும் விரும்பும். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மோசமாக இருக்கிறது என்று வைக்கப்படும் விமர்சனங்கள் உண்மையாக இருந்தால் இந்த வளர்ச்சி எப்படிச் சாத்தியமாகும் என்ற கேள்வியும் எழுகிறது.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு முன்பை விட சிறப்பாக இருக்கிறது, அதனால்தான் வளர்ச்சி அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். சமீபத்தில் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு காவல்துறை இதுதொடர்பான புள்ளி விவரங்களை வெளியிட்டிருந்தது. அதன்படி பார்த்தால் 2019ஆம் ஆண்டை விட குற்றங்கள் படிப்படியாகக் குறைந்து உள்ளது. அதேபோல இந்தியாவிலேயே பெண்களுக்கு பாதுகாப்பாக பெருநகரம் சென்னைதான் என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகத்தின் புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

அதேசமயத்தில் சாமியார் ஆதித்யநாத்தின் ஆட்சியில் உத்தரப் பிரதேசத்தின் சட்டம் ஒழுங்கு ஒட்டுமொத்தமாக சீர்குலைந்து விட்டதாக உச்சநீதிமன்றமே கடும் அதிருப்தி தெரிவித்துள்ளது. பாஜக ஆளும் பல மாநிலங்களில் மதவெறி தலைவிரித்தாடுகிறது. ஆனால் தமிழ்நாட்டு பாஜகவினரோ, அவர்கள் ஆளும் மாநிலங்களின் வளர்ச்சியைப் பற்றியோ, சட்டம் ஒழுங்கு பற்றியோ பேசாமல் அல்லது கவலைப்படாமல் தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்தும், சட்டம் ஒழுங்கு பாதுகாப்பு குறித்தும் தரமற்ற விமர்சனங்களை வைக்கின்றனர். அந்த விமர்சனங்கள் அனைத்தையும் தவிடுபொடியாக்கி இந்தியாவின் நம்பர் ஒன் மாநிலமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு.

---

## தி. மு. க. தொழிலாளர் அணி

# தஞ்சை வடக்கு மாவட்ட துணை அமைப்பாளர் நியமனம்!

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு!

தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் சி.முருகேசன் அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **உ. நீலநாராயணன்,** (23/1, வடக்கு மடவிளாகத் தெரு, திருநாகேஸ்வரம், தஞ்சை மாவட்டம்.) அவர்கள் தஞ்சை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 02-09-2025.

**பிடிசி ஜி.செல்வராஜ்,**
செயலாளர்
தி.மு.க. தொழிலாளர் அணி

---



சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் தொகுதி மணலி மத்திய பகுதி 20வது வட்ட இளைஞர் அணி செயல்வீரர் ச.சர்மா மற்றும் ச.நிர்மல்ராஜ் ஆகியோரின் தந்தை க.சங்கர் அவர்களின் 23ஆம் நினைவு நாளை முன்னிட்டு, அன்னாரின் திருவுருவ படத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் வட்ட கழகச் செயலாளர் எம்.செல்வம் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் கேபிள் த.வேல்கணேசன், தி.வ.மனோகரன், எஸ்.பழனி, மணலி எஸ்.ஸ்டாலின், ஆர். லோகேஷ்பிரபு, செ.விக்னேஷ், எம்.டி.மோகன், சி.ஜெயபிரகாஷ், வெள்ளை செல்வம், சேகர், எம்.சுரேஷ், என்.ஜோதிபாசு, எம்.கண்ணாயிரம், எம்.சுதர்சன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.